4. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1994-95-மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1994-95* ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the financial year 1994-95."

5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1994-95--வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994-95* ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையின்படி கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை முன்மொழிதல், மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1994-95* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய *27-3-1995* ஆம் நாளிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் *1994-95* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக மொத்தமாக ரூ. *773,68,50,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.